**சுருக்கம்**

முதலமைச்சர் பொது நிவாரண நிதி - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் – நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வெள்ளப்பள்ளம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணியின் போது 25.2.2014 அன்று மாரடைப்பால் உயிரிழந்த திருமதி. கருப்பாச்சி, க/பெ திரு. முருகையன் என்பவரின் குடும்பத்திற்கு முதலமைச்சர பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/– வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டது - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை

அரசாணை (2ப) எண். 63 நாள்: 11.09.2014

ஆவணி 26

திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்கப்பட்டவை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை, நாள் 31.08.2014 மற்றும் முதலமைச்சர் அலுவலக குறிப்பு எண்.79/PS/CMO/2014, நாள் 01.09.2014

******

**ஆணை:**

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வெள்ளப்பள்ளம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணித்தளத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது 25.2.2014 அன்று மாரடைப்பால் திருமதி. கருப்பாச்சி, க/பெ.திரு. முருகையன், என்பவர் உயிரிழந்தார். அன்னாரது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/– வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையில் படிக்கப்பட்ட அறிக்கையில் ஆணையிட்டுள்ளார்கள்.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், இந்நேர்வில் உயிரிழந்த திருமதி. கருப்பாச்சி என்பவரின் குடும்பத்திற்கு ரூ.1,00,000/– (ஒரு இலட்சம் ரூபாய் மட்டும்) முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.1,00,000/–க்கான (ஒரு இலட்சம் ரூபாய் மட்டும்) காசோலையை மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதித் (முதலமைச்சர் பொது நிவாரண நிதி) துறை, சென்னை – 9 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேற்படி தொகையை பாதிக்கப்பட்டவரின் குடும்பத்திற்கு காசோலை மூலமாகவோ அல்லது அஞ்சலக சேமிப்பு கணக்கு மூலமாகவோ உரிய நடைமுறை விதிகளின்படி வழங்கி நிவாரணத் தொகை பயனாளிக்கு முழுமையாகப் போய்ச் சேரும் வகையில் செயல்பட்டு அவரிடமிருந்து வரி வில்லையிட்ட பற்றுச் சீட்டினைப் பெற்று, அதில், வட்டாட்சியர் பதவிக்கு குறையாத அலுவலரின் சான்றொப்பத்துடனும் உரிய அலுவலக முத்திரையுடனும் அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதித் (முதலமைச்சர் பொது நிவாரண நிதி) துறை, சென்னை – 9 அவர்களுக்கும் அதன் நகலினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 9–க்கும் அனுப்பி வைக்குமாறு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.48866/முபொநிநி/2014, நாள் 10.09.2014–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச. பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதித் (முதலமைச்சர்
பொது நிவாரண நிதி) துறை, சென்னை – 9 (3 படிகள்)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் (பொறுப்பு), சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் மாவட்டம்.
முதலமைச்சர்அலுவலகம், சென்னை – 9.
நிதித் துறை, சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் பொதுப்பணி) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை –9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்